**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை 01 -**

**General Certificate of Education (Ord.Level) Examination, 01 -**

| | |
|---|---|
| History I<br>வரலாறு I | One hour<br>ஒரு மணித்தியாலம் |

**கவனிக்க :**

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ் வினாத்தாளுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்.

01. தீபவம்சத்தில் குறிப்பிடப்படுகின்ற இறுதி மன்னன்
    1. தேவநம்பியதீஸன் 2. மகாசேனன் 3. வசபன் 4. தாதுசேனன்

02. பொலனறுவைக் காலத்தில் பயன்படுத்தப்பட்ட செப்பு நாணய வகை
    1. கஹபண 2. அக நாணயம் 3. புராணதரண 4. கம்பமஸ்ஸ

03. நிலமட்டத்திலிருந்து 45 அடி ஆழத்தில் காணப்படும் இரணைமடுப் படிவிற்குரிய சரளைக்கற் படிவில் கற்காலத்துக்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்ற இடம்
    1. பதிராஜவெல 2. பூந்தல 3. உடமல்ல 4. பாகியன்கல

04. கிரிந்தி ஓயாவிற்குக் குறுக்காக இளநாக மன்னனது ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்ட குளம்
    1. கவுடுலுவாவி 2. சொரபொரவாவி 3. திஸ்ஸமகாராமகுளம் 4. திஸாவாவி

05. "குகை ஒன்றை பிக்குகளுக்குத் தானமளித்த பருமக 'தொட்டபோஜக' எனும் பதவிப் பெயரால் குறிப்பிடப்படுகின்றார்." தொட்டபோஜக என்பதன் கருத்து
    1. கிராமத்தலைவர் 2. படகுத் துறையை நிர்வகிப்பவர்
    3. பிரதேச ஆட்சியாளர் 4. குளத் தொகுதியை உருவாக்குபவர்

06. "கிராமத்து இல்லத் தலைவர்களிலிருந்து தெரிவு செய்யப்படுபவரே கமிக ஆவார்" என கூறும் நூல்
    1. வம்சத்த பகாசினி 2. இராஜதரங்கினி 3. சமந்த பாஷாதிகாவ 4. தீபவம்சம்

07. புனித வெள்ளரசுமரம் நடப்படும் வைபவத்திற்கு தேவநம்பியதீஸ மன்னனால் அழைக்கப்பட்ட பிரதேசத் தலைவர்களது பிரதேசங்கள் முறையே
    1. கதிர்காமம், சந்தனகாமம் 2. கதிர்காமம், மகாகாமம்
    3. சந்தனகாமம், மகாகாமம் 4. கதிர்காமம், உருவெலகாமம்

08. நிரல் Iல் மன்னர்களது பெயர்களும் நிரல் IIல் அவர்களின் பட்டப் பெயர்களும் தரப்பட்டுள்ளன. அவற்றை முறையாக ஒழுங்குபடுத்தும் போது அமையும் விடைத் தொகுதி

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. குடகண்ணாபயன் | A - மின்னேரியாத் தெய்வம் |
| 2. நிஸங்கமல்லன் | B - காலிங்க சக்கரவர்த்தி |
| 3. மகாசேனன் | C - அலகபய மகாராஜா |
| 4. 1ம் காசியப்பன் | D - நரேஸ்வரன் |

    1. BDAC 2. CDBA 3. BACD 4. DBAC

09. 'திம்பிரிகே' என கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படும் கட்டடத் தொகுதிகள் குறித்து நிற்பது
    1. பிரதேச மட்டத்திலான சபை 2. பிரசவத்திற்கான வைத்தியசாலை
    3. பிக்குமாரின் வழிபாட்டிற்கான இடம் 4. விசேட கட்டடங்கள்

10. நூல் நூற்போர் தொடர்பாக குறிப்பிட்டுள்ள கல்வெட்டு ஒன்று
   1. முதுகல்ல கல்வெட்டு
   2. தோணிகல கல்வெட்டு
   3. வெஹுரகம கல்வெட்டு
   4. போவத்கல கல்வெட்டு

11. பண்டைய கல்வெட்டுக்களில் ரஜமொஹால் எனும் பெயரில் குறிப்பிடப்பட்டுள்ள குளத்தின் உறுப்பு
   1. குளக்கட்டு
   2. கலிங்கல்தொட்டி
   3. மடைக்கதவு
   4. அலைதாங்கி

12. பிரதான வீதிகளில் கவ்வையிலிருந்து கவ்வைக்கு கற்றூண்களை நடுமாறு ஆணையிட்டுள்ள இலங்கை மன்னன்
   1. நிஸங்கமல்லன்
   2. வசபன்
   3. துட்டகைமுனு
   4. 1ம் பராக்கிரமபாகு

13. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் வரிச்சட்டத்தின் மூலம் அறவிடப்பட்ட முக்கியமான வரிகளைக் குறிக்கும் விடைத்தொகுதி
   1. குர்ஹபதி, தகபதி, கஹபதி
   2. குர்ஹபதி, ஹெதிஅட, மதரமஞ்சக்க
   3. தக்கபதி, கஹபதி, மதரமஞ்சக்க
   4. தக்கபதி, போஜக்கபதி, மதரமஞ்சக்க

14. இலங்கையை மூன்று முறை ஆட்சிபுரிந்த பெண் அரசி
   1. திரிலோகசுந்தரி
   2. லீலாவதி
   3. விஹாரமாதேவி
   4. அசோகமாலா

15. இலங்கையின் தென்பகுதியின் கலாசாரத்தைக் காட்டும் கண்ணாடியாகத் திகழும் நகரம்
   1. அனுராதபுரம்
   2. கதிர்காமம்
   3. புந்தல
   4. மாகம

16. 1ம் புவனேகபாகு மன்னன் எதிர்கொண்ட படையெடுப்புக்களை மேற்கொண்ட இரு தளபதிகளும் யாவர்
   1. மித்த தளபதி, மிகார தளபதி
   2. காலிங்கராயர், கலிங்கமாகன்
   3. காலிங்கராயர், சோடகங்கன்
   4. இலங்காபுரன், ஆதிமலைய

17. விஜயபாகு கொல்லயவின் போது மாயாதுன்னைக்கு உதவிபுரிந்த கண்டி மன்னன்
   1. கரலியட்டபண்டார
   2. ஜயவீரபண்டார
   3. வீரசுந்தரபண்டார
   4. சேனாசம்மத விக்கிரமபாகு

18. சியாம் நிக்காய பிரிவு இலங்கையில் ஆரம்பிக்கப்பட காரணமாக இருந்த மன்னன்
   1. 1ம் விமலதர்மசூரியன்
   2. இராஜாதிராஜசிங்க மன்னன்
   3. ஸ்ரீ விஜயராஜசிங்கன்
   4. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்

19. நவீன வானியலின் தந்தை எனப் போற்றப்படுபவர்
   1. நிக்கலஸ்கொப்பனிக்கஸ்
   2. கலிலியோகலிலி
   3. கூடன்பேர்க்
   4. வில்லியம் ஹார்வே

20. A - தேசிய அரசர்களின் ஆதரவு
    B - உலகு பற்றிய தெளிவான விளக்கம் கிடைத்தமை
    C - திசையறி கருவி, வடநட்சத்திரமாணி அறிமுகம்

   என்பவற்றுடன் தொடர்புடைய கண்டுபிடிப்பு
   1. கைத்தொழிற்புரட்சி
   2. மறுமலர்ச்சி
   3. நாடுகாண் பயணம்
   4. மதச் சீர்திருத்தம்

21. ஆசிய நாடொன்றில் போர்த்துக்கேயர் அடைந்த மிக மோசமான முதலாவது தோல்வியாக அமைவது
   1. முல்லேரியா
   2. பலன
   3. கனேதன்ன
   4. கன்னொருவ

22. கண்டி இராட்சியத்தின மீது ஒல்லாந்தர் படையெடுத்த போது அங்கு ஆட்சி புரிந்த மன்னன்
   1. கீர்த்திஸ்ரீ ராஜசிங்கன்
   3. ராஜாதிராஜசிங்கன்
   3. 2ம் இராஜசிங்கன்
   4. 1ம் விமலதர்மசூரியன்

23. கைத்தொழிற் புரட்சியானது முதன் முதலில் ஆரம்பமான நாடு
1. ஜேர்மனி 2. பிரித்தானியா 3. ஸ்பானியா 4. இத்தாலி

* கீழே **A, B, C, D, E** ஆகியவற்றில் தரப்பட்டுள்ள சோடிகள் ஒவ்வொன்றையும் வாசித்து 24ம், 25ம், 26ம், 27ம் வினாக்களுக்கு விடையளிக்குக.

| | | |
|---|---|---|
| A - | 1. சேர் பிரட்ரிக் நோர்த் | 2. சேர் றொபேர்ட் பிரௌண்ரிக் |
| B - | 1. 1815 உடன்படிக்கை | 2. 1818 சுதந்திரப் போராட்டம் |
| C - | 1. கைத்தொழிற் புரட்சி | 2. இங்கிலாந்து |
| D - | 1. டெம்ளர் | 2. மோட்டார் வாகனம் |
| E - | 1. கோல்புறூக் யாப்பு | 2. இராஜகாரியமுறை |

24. முதலாவதால் நிறைவேற்ற முடியாதது இரண்டாவதால் நிறைவேற்றப்பட்டதைக் காட்டும் விடை
1. A 2. B 3. C 4. E

25. முதலாமவர் வாக்குறுதியை மீறியமை இரண்டாவது ஏற்படக் காரணமான விடை
1. A 2. B 3. C 4. E

26. முதலாவதன் தோற்றம் இரண்டாவதன் வீழ்ச்சிக்குக் காரணமான விடை
1. A 2. B 3. C 4. E

27. முதலாமவரின் கண்டுபிடிப்பு இரண்டாவதின் தோற்றத்திற்குக் காரணமான விடை
1. A 2. B 3. C 4. D

28. இலங்கையில் புகையிரத வீதிகள் அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட பிரித்தானிய ஆளுநர்
1. ஹென்றிவோட் 2. எட்வேட்பாண்ட்
3. றொபேட்பிரௌண்ரிக் 4. பிரட்றிக் நோர்த்

29. இராஜாதி ராஜசிங்கனின் மரணத்தைத் தொடர்ந்து கண்டி இராட்சியத்தின் சிம்மாசனத்திற்கு உரிமையார்களாக விளங்கியோர்
1. துரைசாமி, பிலிமத்தலாவ 2. கண்ணுசாமி, துரைசாமி
3. முத்துசாமி, துரைசாமி 4. கண்ணுசாமி, முத்துசாமி

30. டொனமூர் யாப்பின்படி காணி விவசாய அமைச்சராக நியமிக்கப்பட்டவர்
1. சேர்.பொன். இராமநாதன் 2. ஆறுமுகம்பிள்ளை குமாரசுவாமி
3. டி.பி. பானபொக்கை 4. டீ.எஸ். சேனநாயக்க

31. தேயிலை, தென்னை, இறப்பர் பயிர்ச்செய்கைக்கான ஆராய்ச்சி நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் முறையே
1. மகாஇலுப்பள்ளம, லுணுவில, கண்ணொருவ 2. தலவாக்கல, லுணுவில, அகலவத்த
3. தலவாக்கல, லுணுவில, மகாஇலுப்பள்ளம 4. கண்ணொருவ, லுணுவில, அகலவத்த

32. சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர்
1. டட்லி சேனாநாயக்க 2. டி.எஸ். சேனாநாயக்க
3. வில்லியம் கோபல்லாவ 4. ஜே.ஆர். ஜெயவர்த்தன

33. நாட்டின் முதன்மையானதும் இறுதியானதுமான அதிகாரம் மிக்க நீதிமன்றம்
1. மேல்நீதிமன்றம் 2. முதல்நிலை நீதிமன்றம்
3. உச்ச நீதிமன்றம் 4. மேன்முறையீட்டு நீதிமன்றம்

34. வட அமெரிக்க குடியேற்றங்களில் இறுதியாகத் தோற்றம் பெற்ற குடியேற்றம்
1. ஜோர்ஜியா 2. நியூஜெர்சி 3. வேர்ஜினியா 4. நியூயோர்க்

35. "பிரதிநிதித்துவம் இன்றேல் வரியுமில்லை" என்னும் சுலோகத்துடன் தொடர்புபட்ட புரட்சி

1. கைத்தொழிற் புரட்சி
2. பிரான்சியப் புரட்சி
3. அமெரிக்க சுதந்திரப் புரட்சி
4. ரஷ்யப் புரட்சி

36. "சட்டத்தின் சாரம்" எனும் நூலினை வெளியிட்டு தனிப்பட்ட ஒருவரிடம் அதிகாரங்கள் குவிந்திருப்பது பொருத்தமற்றது எனக் குறிப்பிட்டவர்

1. அடம்ஸ்சிமித்
2. ரூசோ
3. வோல்டெயர்
4. மொண்டெஸ்கியூ

37. ஐக்கிய அமெரிக்கா முதலாம் உலகப் போரில் பங்குபற்றுவதற்கு உடனடியாக வித்திட்ட காரணம்

1. சரஜீவோ சம்பவம்
2. லுசித்தானியா பயணிகள் கப்பல் தாக்கப்பட்டமை
3. பேர்ள் ஹாபர் தாக்கப்பட்டமை
4. பொஸ்டன் தேநீர் விருந்து

38. சர்வதேச சங்கம் உருவாவதற்கு முனைப்புடன் செயலாற்றியவர்

1. பிராங்ளின் ரூஸ்வெல்ட்
2. வூட்ரோ வில்சன்
3. லொயிட் ஜோர்ஜ்
4. ஹிட்லர்

39. பாசிசவாத அரசியல் கட்சியினூடாக இத்தாலியில் ஆட்சிக்கு வந்தவர்

1. முசோலினி
2. ஹிட்லர்
3. ஹிண்டன்பேர்க்
4. ஜோசப் ஸ்டாலின்

40. அணிசாரா நாடுகளின் மகாநாடு உருவாக்கப்பட காரணமாக இருந்த இந்தியத் தலைவர்

1. மகாத்மாகாந்தி
2. மார்ஷல்டிட்டோ
3. அப்துல் கமால் நசார்
4. ஜவஹர்லால்நேரு

***